# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:32** **தேதி:-31.03.2015**

## மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

**BSNL ATM சங்கமும் வேலை நிறுத்த அறிவிப்பை கொடுத்துள்ளது:-** ஏப்ரல் 21 மற்றும் 22ஆம் தேதிகளில் நடைபெற உள்ள வேலை நிறுத்தத்திற்கான அறிவிப்பை FORUM OF BSNL UNIONS AND ASSOCIATIONS 12.03.2015 அன்று கொடுத்தன. BSNL ATM சங்கத்தின் பொது செயலாளர் தோழர் S.D.சர்மா அன்றைய தேதியில் புதுடெல்லிக்கு வர இயலாத காரணத்தால் 24.03.2015 அன்று தனியாக ஒரு வேலை நிறுத்த அறிவிப்பை நிர்வாகத்திற்கு கொடுத்துள்ளார். அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் ஒன்று படுவோம். வேலை நிறுத்தத்தை முழு வெற்றியாக மாற்றிடுவோம். BSNLஐ பாதுகாக்கும் மகத்தான கடமையை நிறைவேற்றுவோம்.

**மத்திய சங்கம் நிர்வாகத்துடன் இந்த வாரம் சந்தித்த போது:-** 31.03.2015 அன்று நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி அவர்களும், EXECUTIVE DIRECTOR (NB) திரு முகமது அஷ்ர..ப் கான் அவர்களை சந்தித்து QA சான்றிதழ் வழங்குவதில் காட்டும் அதீத கால தாமதத்தால் மும்பை டெலிகாம் ..பேக்டரியில் ட்ராப் வயர் உற்பத்தி தடுக்கப்பட்டு உள்ளதை சுட்டிக் காட்டினார்கள். இந்த பிரச்சனை விரைவில் தீர்வு காணப்படும் என அவர் பதிலளித்தார்.

BSNLஊழியர் சங்கத்திற்கு தற்போது வழங்கப்பட்டுள்ள இடம் ஏற்கனவே ஜார்கண்ட் மாநில அரசாங்கத்திற்கு மத்திய அரசால் விற்கப்பட்டு விட்டதால் மாற்று இடம் வழங்க வேண்டும் என்று கோரினர். மாற்று ஏற்பாடு விரைவில் செய்யப்படும் என ED(NB) உறுதி அளித்துள்ளார்.

31.03.2015 அன்று நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி அவர்களும், Sr.GM(SR) திரு ஷமீம் அக்தர் அவர்களை சந்தித்து அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் நிர்வாகிகளுக்கு வழங்கப்படும் சலுகையான IMMUNITY FROM TRANSFER பிரச்சனையில் வெளியிடப்பட்ட உத்தரவு DOTயின் உத்தரவிற்கு மாறாக இருப்பதை சரிசெய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டனர். இது தொடர்பாக DIRECTOR (HR) அவர்களுடன் ஏற்கனவே விவாதிக்கப்பட்டு இருந்தது. Sr.GM(SR) விரைவில் திருத்தம் வெளியிடப்படும் என உறுதி அளித்தார்.

**IDA 0.2% உயர்ந்துள்ளது:-** நமக்கு வழங்கப்பட்டு வரும் IDA 01.04.2015முதல் 0.2% உயர்ந்து 100.5%ஆக மாறி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பெண்களுக்கான ஊழியர் குடியிருப்பு:-** தற்போதுள்ள விதிகளின் படி பெண் ஊழியர்களுக்கு/ அதிகாரிகளுக்கு ஊழியர் குடியிருப்பில் 2% ஒதுக்கீடு உள்ளது. அது போனமானதாக இல்லை என்ற அடிப்படையில் தற்போதுள்ள குடியிருப்பு மற்றும் பெண் ஊழியர்கள்/அதிகாரிகள் தொடர்பான ஸ்தூலமான முன்மொழிவுகளை நிர்வகத்திற்கு அளிக்க வேண்டுமென அனைத்து தலைமை பொது மேலாளர்களுக்கும் கார்ப்பரேட் அலுவலகம் கடிதம் எழுதியுள்ளது.

**தேசிய கவுன்சில் கூட்டம்:-** நமது மத்திய சங்கம் எழுதிய கடிதத்தின் அடிப்படையில் தேசிய கவுன்சில் கூட்டம் 28.04.2015 அன்று நடைபெறும் என நிர்வாகம் தெரிவித்து உள்ளது.

**இலாகா தேர்வுகளில் SC/ST ஊழியர்களுக்கு தளர்வு:-** பஞ்சாப் மாநிலத்தில் நடந்து முடிந்த JTO(C) தேர்வில் ஒரு SC தோழருக்கு தகுதி மதிப்பெண்ணில் தளர்வு வழங்க வேண்டும் என நமது மத்திய சங்கம் கேட்டிருந்தது. SC/ST ஊழியர்களுக்கு போட்டி தேர்வில் தகுதி மதிப்பெண்களில் தளர்வு வழங்க வேண்டுமென DOPT வழிகாட்டுதலின் அடிப்படையில் இதற்கென ஒரு குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரையான SC/ST ஊழியர்களுக்கு போட்டி தேர்வில் தகுதி மதிப்பெண்களில் தளர்வு வழங்க வேண்டுமென்பது எதிர்கால தேர்வுகளுக்கு மட்டுமே பொருந்தும் என நிர்வாகம் பதிலளித்துள்ளது.

**ஸ்பெக்ட்ரம் ஏலம் நிறைவுற்றது:-** 19 நாட்கள் நடைபெற்ற ஸ்பெக்ட்ரம் ஏலம் 25.03.2015 அன்று நிறைவு பெற்றது. 115 சுற்று ஏலத்திற்கு பின் மொத்த தொகையாக 1,09,874 கோடி ரூபாய்களுக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளன. 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஏலத்தில் 1,06,000 கோடி ரூபாய்கள் கிடைத்தன. 2015-16ஆம் ஆண்டில் உரிமம் காலாவதியாக உள்ள 8 தனியார் நிறுவனங்கள் ஏலத்தில் பங்கேற்றன. அதிக ஏலத்தொகையின் காரணமாக அவர்களின் கடன்கள் அதிகமாகும் என்றும் கட்டணங்கள் உயர்த்தப்படும் எனவும் தனியார் நிறுவனங்கள் கூற ஆரம்பித்துள்ளன.

**ஸ்பெக்ட்ரம் விலையினை காரணம் சொல்லி தனியார் நிறுவனங்கள் நியாயமற்ற ஆதயங்களை பெற திட்டமிடுகின்றன- மத்திய அமைச்சர் ரவி சங்கர் பிரசாத்:-** சமீபத்திய ஸ்பெக்ட்ரம் ஏலத்தில் அதிக அளவிலான தொகை கேட்கப்பட்டுள்ளதால் கட்டணங்களில் உயர்வு இருக்கும் என தனியார் நிறுவனங்கள் கூறி வருகின்றன. குரல் அழைப்புகளில் நிமிடத்திற்கு 5 முதல் 7 பைசா வரையிலும், டேட்டா பயன்பாட்டிற்கு 1MBக்கு 1 முதல் 2 பைசா வரையிலும் உயர்த்தப்படும் என ஏர்டெல் அதிபர் சுனில் மிட்டல் பார்தி தெரிவித்துள்ளார். கட்டணங்களை உயர்த்த வேண்டிய அவசியம் உள்ளது என ரிலையன்ஸ் நிறுவனமும் தெரிவித்துள்ளது. ஆனால் தொலை தொடர்பு அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் தனியார் நிறுவனங்கள், ஸ்பெக்ட்ரம் விலையினை காரணம் சொல்லி நியாயமற்ற ஆதயங்களை பெற திட்டமிடுகின்றன என்று கூறியுள்ளார். இந்த ஸ்பெக்ட்ரம் 20 வருடங்களுக்கு தனியார் நிறுவனங்கள் வசம் இருக்கும் என்றும் ஒரு ஆய்வின் படி, ஒரு நிமிடத்திற்கு 1.3 பைசா தான் செலவு அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**